பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

08 10 2026 | 7 15 | செய்தி ஆசிரியர்

வியாழக்கிழமை | காலை | ஆர். சிதம்பரநாதன்

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திரமோடி இந்திய மொபைல் மாநாட்டை புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.
- இந்தியாவை புதுமை கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்திக்கான முக்கிய மையமாக ஐரோப்பிய நாடுகள் கருதுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
- இந்திய விமானப்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.
- ரஷ்யா - யுக்ரைன் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சிகளில் இந்தியா தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.
- துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – துருக்கியின் Doga Turkmen இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<><><><><><>

இந்திய மொபைல் மாநாடு புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

பிரதமர் திரு. நரேந்திரமோடி இம்மாநாட்டை தொடங்கிவைத்து உரையாற்ற உள்ளார்.

5-ஜி, 6-ஜி அடுத்த தலைமுறை செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள், செமி கண்டெக்டர்கள் உள்ளிட்ட துறைகள் குறித்து இம்மாநாட்டில் விவாதிக்கப்பட உள்ளது.

டிஜிட்டல் சூழலில் உருவாகும் வாய்ப்புகள் குறித்து ஆராய்வது தொடர்பாக உலகளாவிய தொழில்நுட்ப நிபுணர்கள், துறைசார்ந்த நிபுணர்கள், புத்தொழில் நிபுணர்கள், முதலீட்டாளர்கள், புதுமை கண்டுபிடிப்பாளர்கள் ஆகியோர் கலந்துரையாட உள்ளனர்.

இந்த மொபைல் மாநாட்டில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><>

இந்தியாவை புதுமை கண்டுபிடிப்பு மற்றும் உற்பத்திக்கான முக்கிய மையமாக ஐரோப்பிய நாடுகள் கருதுவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற இந்திய - ஐரோப்பிய தடையற்ற வர்த்தக சங்கம் இடையேயான மாநாட்டில் கலந்துகொண்ட பின் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

இம்மாநாட்டில், சுவிட்சர்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே ஆகிய நாடுகளின் அமைச்சர்கள் மற்றும் வர்த்தக பிரதிநிதிகளுடன் நடைபெற்ற இருதரப்பு பேச்சுகள் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாக கூறினார்.

இந்தியாவுடன் பல்வேறு வகையான ஒப்பந்தங்களை மற்ற நாடுகள் மேற்கொண்டுள்ளதாகவும் இது தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கு வழிவகுக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் மூலம் சுமார் 10 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும், இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

<><><><><><>

ரஷ்யா - யுக்ரைன் இடையேயான மோதலை முடிவுக்கு கொண்டுவர பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியிலான நடவடிக்கையே ஒரே வழிமுறை என்று இந்தியா மீண்டும் வயுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், இரு நாடுகளுக்கிடையேயான மோதலை முடிவுக்குக் கொண்டுவரவும், அமைதியை ஏற்படுத்தவும் ரஷ்யா-யுக்ரைன் இடையே இந்தியா தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாக கூறினார்.

இவ்விகாரத்தில் இந்தியாவின் முயற்சியை ரஷ்யாவும் – யுக்ரைனும் பாராட்டி உள்ளதாக ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்கு பதிலளித்த அவர், ரஷ்ய ராணுவத்தில் உள்ள இந்தியர்களை விடுவிக்க ரஷ்ய தரப்புடன் மத்திய அரசு தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாக கூறினார்.

ரஷ்ய ராணுவத்தில் 259 இந்தியர்கள் சேர்ந்ததாகவும் அவர்களில் 139 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஃப்ளை துபாய் விமானத்தில் சக விமானியால் தாக்கப்பட்டு அபுதாபி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் இந்திய தலைமை விமானி ஸ்மித் மச்சார் நலமுடன் இருப்பதாகவும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கூறினார்.

<><><><><><>

இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் கானா பயிர் ஆராய்ச்சி நிறுவனம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

கானாவில் வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர், கானா வெளியுறவு அமைச்சர் திரு. Samuel Okudzeto முன்னிலையில் வேளாண் ஆராய்ச்சி, கல்வி, தொழில்நுட்ப பரிமாற்றம் ஆகியவற்றில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக கானாவில் தக்காளி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அதிக மகசூல் தரும் தக்காளி ரகங்களை அறிமுகப்படுத்துவது குறித்து இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் ஆலோசனை அளிக்க உள்ளது.

<><><><><><>

இந்திய விமானப்படை தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதுகுறித்து விமானப்படை தலைமை தளபதி ஏர் சீஃப் மார்ஷல் அமர் பிரித் சிங் ஆகாஷவாணிக்கு அளித்த பேட்டியில் நாட்டை பாதுகாக்க இந்திய விமானப்படை எப்போதும் விழிப்புடனும், அர்ப்பணிப்புடனும் உள்ளதாக கூறினார்.

கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை விமானப்படையின் சக்தியை மீண்டும் உறுதிப்படுத்தியதாக தெரிவித்தார்.

அத்துடன் நாட்டின் இறையாண்மையை பாதுகாக்கும் அதன் திறனையும் வெளிப்படுத்தியது என்று அவர் கூறினார்.

நெருக்கடியான தருணங்களிலும் நாட்டிற்கும், மனித சமூகத்திற்கும் விமானப்படை சேவையாற்றுவதாக விமானப்படை தலைமை தளபதி குறிப்பிட்டார்.

<><><><><><>

பொதுச் சேவையின் தலைமை பொறுப்பில் 25 ஆண்டுகளை நிறைவு செய்த தற்காக தமக்கு வாழ்த்து தெரிவித்த குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்முக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

கோடிக்கணக்கான இந்தியர்கள் நம்பிக்கையுடனும், உறுதியுடனும் நாட்டின் மாற்றத்தில் பங்கேற்றதாலும் முன்னேற்றங்கள் அனைத்தும் சாத்தியமானதாக பிரதமர் கூறியுள்ளார்.

குடியரசுத் துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன், முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் ஆகியோரும் தமக்கு வாழ்த்து தெரிவித்ததற்காக பிரதமர் நன்றி தெரிவித்துள்ளார்.

<><><><><><>

சரக்கு மற்றும் சேவை வரி குழுமக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில், சரக்கு மற்றும் சேவை வரி தொடர்பான விவகாரங்களுக்கு தீர்வுகாண்பது தொடர்பான சீர்திருத்தங்கள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

தற்போதுள்ள நிர்வாக தடைகளை நீக்கி எளிமைப்படுத்துவது குறித்தும், சிறிய வணிக நிறுவனங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்தும் விவாதிக்கப்படுகிறது.

செயல்முறை சீர்திருத்தங்கள், எளிதான வாழ்க்கை மற்றும் வணிகத்தில் ஈடுபடுதல், சேவை ஏற்றுமதி மற்றும் மின்னணு வர்த்தகம் ஆகிய ஐந்து அம்ச திட்டங்கள் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட உள்ளது.

அத்துடன், சிறிய வரி செலுத்துவோர் வருமான வரி கணக்குகளை தாக்கல் செய்ய வேண்டிய எண்ணிக்கையை குறைத்தல், சிறு வணிகங்களுக்கு பல மாநிலங்களின் பதிவுகளை நீக்குதல் உள்ளிட்டவையும் இக்கூட்டத்தில் முன்மொழியப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<><><><><><>

இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்கள் குறித்து, கருத்து கூறுவதற்கு பாகிஸ்தானுக்கு எந்த உரிமையும் கிடையாது என்று மாநிலங்களைவைத் துணைத் தலைவர் திரு. ஹரிவன்ஷ் தெரிவித்துள்ளார்.

தான்சானியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச நாடாளுமன்ற யூனியன் பொதுச்சபைக் கூட்டத்தின் போது, காஷ்மீர் குறித்து பாகிஸ்தான் தெரிவித்த சில தேவையற்ற கருத்துகள் தொடர்பாக பதிலளித்த போது அவர் இதனை தெரிவித்தார்.

காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பிரிக்க முடியாத பகுதி என்றும், திரு. ஹரிவன்ஷ் அப்போது குறிப்பிட்டார்.

<><><><><><>

தீவிரவாதத்திற்கு நிதியளிப்பதை தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் இந்தியா – இத்தாலி இடையேயான பணிக்குழுவின் இரண்டாவது கூட்டம் புதுதில்லியில் நடைபெற்றது.

இதில் இரு நாடுகளின் தீவிரவாத எதிர்ப்பு அமைப்புகள் பங்கேற்றன. அப்போது கடந்த ஆண்டு ஜம்மு-காஷ்மீர் பஹல்காமில் நிகழ்ந்த தீவிரவாத தாக்குதல்களுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லை தாண்டிய தீவிரவாதம் உட்பட தீவிரவாதத்தின் அனைத்து நடவடிக்கைகளும் அவர்கள் கண்டித்தனர்.

போதைப்பொருள் கடத்தல் உட்பட உலகளவில் ஏற்பட்டு வரும் பல்வேறு அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதில் ஒத்துழைப்பது தொடர்பாக இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபை, உலகளாவிய தீவிரவாத எதிர்ப்பு அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளில் தீவிரவாத எதிர்ப்புக்கான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதன் அடுத்த கூட்டம் இத்தாலியின் ரோம் நகரில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

<><><><><>

ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி படையினர் சவூதி அரேபியாவில் 2 விமான நிலையங்களை தாக்கியதை அடுத்து மேற்காசியாவில் பதற்றம் அதிகரித்துள்ளது.

Abha விமான நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் மொரக்கோ மற்றும் அல்ஜிரிய நாட்டைசேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டதாகவும் 28 பேர் காயமடைந்ததாகவும் சவூதி அரேபிய நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல் கிங் காலித் விமான நிலையத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் சூடான் நாட்டை சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும், 8 பேர் காயமடைந்ததாகவும் கூறியுள்ளனர்.

இதற்கிடையே, ஏமனின் செங்கடல் கடற்கரை பகுதியில் கடந்த மாதம் ஹவுதி படையினர் கைப்பற்றிய பகுதிகளை மீண்டும் மீட்பதற்காக சவூதி அரேபியாவும், ஏமன் படைகளும் கூட்டாக தரைவழி மற்றும் வான்வழி தாக்குதலில் ஈடுபட திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

<><><><><>

*விளையாட்டுச் செய்திகள்*

துருக்கியில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – துருக்கியின் Doga Turkmen இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்றில் இந்த இணை 6-3, 6-1 என்ற செட்கணக்கில் துருக்கியின் Asya Yilmaz – Illay Yoruk இணையை வென்றது.

மற்றொரு முதல்சுற்று போட்டியில் இந்தியாவின் ருத்துஜா போஸ்லே – ஆஸ்திரேலியாவின் Elena Micic இணை வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இந்த இணை 6-3, 6-3 என்ற செட்கணக்கில் போலந்தின் Weronika – அமெரிக்காவின் Alana Smith இணையை வென்றது.

<><><><><><>

இந்தியா – ரஷ்யா அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் நட்புணர்வு கால்பந்து போட்டி கொல்கத்தாவில் இன்று நடைபெறுகிறது.

<><><><><><>

ஆசிய பாரா விளையாட்டுப் போட்டியின் தொடக்க நிகழ்ச்சியில் பேட்மிண்டன் வீரர் பிரமோத் பகத்தும், டேபிள் டென்னிஸ் வீராங்கனை பவினா படேலும் தேசியக்கொடியை ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டி ஜப்பானில் இம்மாதம் 18 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<><><><><><>